**நாள் 19.06.2023.**

**OS 90/2020 வா.சா 1 சாட்சி நந்தினிபிரியா மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது பெங்களூரில் என் கணவருடன் வசித்து வருகின்றேன். என் அப்பாவிற்கும் என் அம்மாவிற்கும் விவகாரத்து ஆனபோது எனக்கு 15 வயது இருக்கும். விவகாரத்து ஆன சமயத்தில் நாங்கள் வாடகைவீட்டில்தான் குடியிருந்தோம் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை. 2009 ம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை வழக்கு சொத்தில் என் அப்பா வீடு கட்டினார். என் அப்பா வழக்கு சொத்தை கிரயம் வாங்கும்போது நான் என் அம்மா எல்லோரும் என் அப்பாவோடுதான் வசித்தோம். என் அப்பா அந்த இடத்தில் வங்கி கடன் போட்டு வாங்கவில்லை அவருடைய சம்பாதியத்தில்தான் வாங்கினார். என் அப்பா வீடு கட்டுவதற்கு வங்கி கடன் வாங்கி இருந்தார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. என் அப்பா வங்கியில் கடன் வாங்கியிருந்தாரா என்று என் அம்மாவிற்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. என் அப்பா எனக்கும் என் அக்காவிற்கும் 2018 ல் வழக்கு சொத்தில் தான செட்டில்மென்ட் கொடுத்துவிட்டார். என் அப்பா இறந்தபிறகும் பிரதிவாதி மீனாட்சி வீட்டை காலிசெய்து தரவில்லை. என் அப்பா இறந்து அவரை தூக்கிகொண்டு போனபிறகு எங்களை அந்த வீட்டிற்குள் விடவில்லை. பிரதிவாதி என் அப்பாவின் 2 வது மனைவி. என் அப்பாவிற்கும் பிரதிவாதிக்கும் 2015 ம் ஆண்டு திருமணம் ஆனது. 2 வது மனைவி இருந்ததால் நாங்கள் அந்த வீட்டிற்கு சென்று பார்த்ததில்லை என் அப்பாதான் எங்களை வந்து பார்ப்பார். அவ்வாறு வந்து பார்த்தபோது அவர் எங்களுக்கு பணமோ, நகையோ கொடுத்ததில்லை. என் அப்பாவிற்கும் பிரதிவாதிக்குமிடையே குடும்பநலநீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான் என் அப்பா தான் அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். பிரதிவாதி என் அப்பாமீது குடும்ப வன்முறை சட்டத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் போலிசார் விசாரித்துவிட்டு என் அப்பாமீது தவறு இல்லை என்று இறுதியறிக்கை தாக்கல் செய்துவிட்டார்கள்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.